# பாடம் 36: திருநிலைகள் (அறிமுகம்)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (9 வயது) | : 1 முதல் 7 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (12 வயது) | : 1 முதல் 10 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (15 வயது) | : 1 முதல் 13 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
நாம் இன்னும் திருச்சபையின் அருளடையாளங்கள் குறித்து கற்று வருகிறோம். நாம் இதுவரை திருமுழுக்கு, உறுதிபூசுதல் மற்றும் (திருப்பலியோடு நெருங்கியத் தொடர்புடைய) நற்கருணை அருளடையாளங்கள் குறித்து பார்த்துள்ளோம். வருகின்ற சில பாடங்களில், திருநிலைகள் அருளடையாளம் குறித்து நாம் விவாதிக்க இருக்கிறோம்.

**தற்போதைய பாடம்:**
1. திருச்சபையின் பொது திருப்பணிக்கு அழைக்கப்படும் ஆண்கள், ‘‘திருநிலைப்பாடு’’ என்ற செயல்மைக்குள் செல்கின்றனர்.

2. ஆயரே திருநிலைகளின் திருப்பணியாளராக இருக்கிறார், மேலும் அவர் மட்டுமே கைகளை வைத்து ஒரு திருத்தொண்டரை அல்லது ஒரு குருவை அல்லது மற்றொரு ஆயரை திருநிலைப்படுத்த முடியும்.

*கதிம 1538*: ‘‘திருச்சபையில் உள்ள இந்த அமைப்புகளில் ஒன்றுடனான ஒன்றிணைவு, ஒரு சமய மற்றும் திருவழிபாட்டுச் செயலாக, ஓர் அர்ப்பணமாக, ஓர் ஆசியாக அல்லது ஓர் அருளடையாளமாக இருக்கின்ற *ஓர்தினாத்சியோ* (திருநிலைப்பாடு) என்றச் சடங்கின் வழியாக முழுமை பெற்றுள்ளது. ஓர் ஆணை ஆயர்கள், குருக்கள், அல்லது திருத்தொண்டர்கள் திருநிலைக்குள் ஒன்றிணைக்கும் அருளடையாளச் செயலுக்காக, குழுமத்தால் வழங்கப்படும் எளியத் தேர்ந்தெடுத்தல், பதவியளித்தல், ஒப்படைத்தல், அல்லது நிறுவப்படுதல் என்பதைத் தாண்டி, கிறிஸ்துவிடம் இருந்து மட்டுமே தமது திருச்சபை வழியாக வரக்கூடிய ‘புனித அதிகாரத்தை’ (*சாக்ரா பொத்தேஸ்தஸ்*) செயலாக்க அனுமதிக்கும் தூய ஆவியாரின் கொடை வழங்கப்படுவதால், ‘திருநிலைப்பாடு’ என்றச் சொல் இன்று ஒதுக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவே தமது திருச்சபைக்காக, ஒருவரை பிரித்தெடுத்து பணியமர்த்துவதால், *கொன்சக்ரத்தியோ* (அர்ப்பணித்தல்) என்றும் திருநிலைப்பாடு அழைக்கப்படுகிறது. அர்ப்பணச் செபத்தோடு, ஆயர் தமது கைகளை வைத்தல், இந்த திருநிலைப்பாட்டின் காணப்படும் குறியீட்டை அமைக்கிறது.’’

3. திருநிலைப்பாடு பெற்ற குருக்களும் திருத்தொண்டர்களும் வேறுபட்டப் படிநிலைகளில் ஆயரின் திருப்பணியில் பங்கு கொள்கின்றனர்.

4. திருச்சபையில் கற்பித்தல், ஆளுதல், மற்றும் புனிதப்படுத்தல் ஆகியவை திருநிலைகளின் நோக்கமாக இருக்கிறது.

5. திருநிலைப்பாடு இந்த அருளடையாளத்தைப் பெறுகிறவர் மீது அழியாத குறியைப் விட்டுச் செல்கிறது.

6. திருத்தூதர்கள் திருச்சபையின் திருப்பணியாளர்கள் மீது கைகளை வைத்து திருநிலைப் படுத்தியப் படியுருவைப் புனித மறைநூல் காட்டுகிறது, மேலும் இந்த புனித மரபை முறிபடா வழிவருதலில் தூய கத்தோலிக்கத் திருச்சபை பாதுகாத்து வருகிறது.

1 திமொத்தேயு 4:14: ‘‘இறைவாக்கு உரைத்து, மூப்பர்கள் *உன் மீது கைகளை வைத்தபோது*, உன்னில் அளிக்கப்பட்டக் கொடையைக் குறித்து அக்கறையின்றி இராதே.’’

2 திமொத்தேயு 1:6: ‘‘*உன் மீது என் கைகளை வைத்தபோது* உனக்குள் பெற்ற கடவுளின் புதியக் கொடையை தூண்டியெழுப்ப நான் உனக்கு நினைவூட்டுகிறேன்.’’

7. திருநிலைகள் என்ற ஒரே அருளடையாளத்தில் மூன்று படிநிலைகள் இருக்கின்றன:
ஆயர்

குரு
திருத்தொண்டர்

8. அந்தியோக்கு புனித இக்னேசியுஸ் (2ஆம் நூற்றாண்டு), ‘‘ஆயர், குருக்கள், மற்றும் திருத்தொண்டர்கள் இன்றி, ஒருவர் திருச்சபை பற்றி பேச முடியாது’’ என்கிறார்.

9. முக்கியமாக திருச்சபை முழுவதுமே குருத்துவ மக்கள் இருக்கின்றனர் (கதிம 1591), எல்லா கத்தோலிக்கரும் ‘‘விசுவாசிகளின் பொதுக் குருத்துவத்தில்’’ பங்கேற்கின்றனர் என்பதே இதன் பொருள். ஆனால் அதைத் தாண்டி, ‘‘திருப்பணி குருத்துவம்’’ இருக்கிறது, பொதுக் குருத்துவத்தின் நடுவிலிருந்து அழைக்கப்பட்ட ஆண்களுக்கு திருநிலைகள் அருளடையாளம் வழியாக இந்த திருப்பணி வழங்கப்படுகிறது. ‘‘இந்த திருப்பணி குருத்துவம் பொதுக் குருத்துவத்திற்கு பணி செய்கிறது’’ (கதிம 1547), மேலும் ‘‘குழுமத்தின் நடுவே தலையாகிய கிறிஸ்து என்ற நபரிலும், அவரது பெயராலும் பணி செய்கிறது’’ (கதிம 1591).

10. திருநிலைப்பாடு பெற்ற இந்த ஆண்கள் கிறிஸ்துவுக்குள் வடிவாக்கப் பெற்றுள்ளனர். இது ஒரு ‘‘இருப்பியல்சார்’’ மாற்றம் என்று அழைக்கப்படுகிறது. இது அவர்கள் என்ன செய்கின்றனர் என்பதை மட்டுமன்று, அதற்கும் மேலாக, அவர்கள் யார் என்பதையும் (இது அவர்கள் என்ன செய்கின்றனர் என்பதைத் தீர்மானிக்கிறது) குறிப்பதாக இருக்கிறது. திருச்சபையின் மணவாளர் கிறிஸ்துவைப் போன்றே, மக்கள் நடுவிலிருந்து தனியே அழைக்கப்பட்டு திருச்சபையின் திருப்பணியாளர்களாகத் திருநிலைப்பாடு பெற்ற இந்த ஆண்கள், தற்போது திருச்சபைக்கு ‘‘கிறிஸ்துவாகவும்’’ இருக்கின்றனர். கிறிஸ்து தந்தையோடு இருந்தாலும், அவர் இவ்வாறுதான் தமது மணவாட்டியோடு தொடர்ந்து இருக்கிறார்.

11. இதன் காரணமாக, திருநிலைகளுக்கு பெண்கள் திருநிலைப்படுத்தப் பெறுவதில்லை, ஏனெனில் இருந்த அருளடையாத்துக்கு ஆண்தன்மை அவசியமாக இருக்கிறது. 1994ல் திருத்தந்தை 2ம் யோவான் பவுல், ‘‘பெண்களுக்கு குருத்துவத் திருநிலைப்பாடு வழங்கத் திருச்சபைக்கு அதிகாரமில்லை, இந்த தீர்ப்பு திருச்சபையின் எல்லா விசுவாசிகளாலும் உறுதியாக் கொள்ளப்பட வேண்டும்’’ என்று அறிவித்தார்.

12. திருச்சபையின் திருநிலைப்பாடு பெற்ற அருள்பணியாளராக இருக்க, பொதுநிலையினரை விட ஓர் ஆண் அதிகத் தூயவராக ஆக்கப்பட அவசியமில்லை. மற்ற ஒவ்வொருவரையும் போன்றே, ஓர் அருள்பணியாளர் தூயநிலை மற்றும் நிறைவை நோக்கித் தனிப்பட்ட விதத்தில் போராடுகிறார். மக்களைச் சந்திப்பதும், அவர்களோடு பணியாற்றுவதும் ஓர் அருள்பணியாளரின் திருப்பணியாக இருக்கிறதால், மற்ற மக்களை விட ஓர் அருள்பணியாளரின் வலுவின்மை மிக அடிக்கடி காணப்படுகிறது. இத்தகையச் சூழல்கள் மனிதருக்கு தூயநிலையில் வளர்வதற்கும், தங்களது அருள்பணியாளர் அவ்வாறு வளர்வதற்கு மக்கள் கருணையோடும் பொறுமையோடும் அனுமதிக்கக் கற்பதற்குமான வாய்ப்பாக இருக்கிறது.

13. கடந்த பல பதினாண்டுகளாக, குழந்தைகளிடம் பாலியல் முறைகேடு குற்றம் செய்த குருக்கள் தொடர்பாக உலகெங்கும் இருந்து மிகுதியான புகார்கள் வந்துள்ளன. இச்செயல் எங்கு நடந்திருந்தாலும் அது தவறானது, இவ்வாறு செய்த அருள்பணியாளர் குறித்து புகார் அளிக்கப்பட வேண்டும். எனினும், திருச்சபை மீதான நமது விசுவாசத்தை இழக்க இது காரணமாக இருக்கக்கூடாது, கடவுளால் அழைக்கப்பட்டத் திருப்பணியாளர்களும் பாவிகளாக இருக்கின்றனர் என்பதை அறிந்திருக்க வேண்டும். குற்றம் காணப்படுகின்ற அருள்பணியாளர் ஒவ்வொருவரோடும் தியாகத்தோடும் நேர்மையாகவும் வாழும் மற்ற பல அருள்பணியாளர்களும் வாழ்கின்றனர்.